பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 09 சனிக்கிழமை 26.08.2023 கதிர் 288

திருமலையை இந்தியாவுக்கு தாரை வார்ப்பதன் மூலம்

# அதிகாரப் போட்டிக்குள் நாட்டைத் தள்ளும் ரணில்

வசந்த முதலிகே குற்றசாட்டு

**மக்கள்ஆணையில்லாதஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பெரும் அதிகாரப் போட்டிக்குள் தள்ளிவிடுவதற்கு முயற்சிக்கிறார் என்று மக்கள் போராட்டக்கள அமைப்பின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச்சந்தித்துஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:**

**திருகோணமலைக்குச்சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை கூட்டியுள்ளார்.** ☞2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த வருடத்தில் எப்படியும் ஜனாதிபதித் தேர்தல் உறுதி என்பதால் அதை நோக்கிய அரசியல் நகர்வுகள் கொழும்பில் தீவிரம் பெறத் தொடங்கிவிட்டன. தற்போதைய நிலையில் நாட்டில் உள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் ஜனாதிபதித் தேர்தலைத் தனித்து வெல்லக்கூடிய சூழல் இருப்பதாகத் தெரியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி, பொது ஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஜேவிபி, சுதந்திர மக்கள் சபை, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்று எந்தவொரு கட்சியும் தனித்து ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாகை சூடுவதற்கான களயதார்த்தம் இல்லாத நிலையில், அதை அடைவதற்கான சாத்தியப்பாடுகள் - கூட்டுக்கள் - தொடர்பில் கட்சிகள் ஆராயத் தொடங்கியுள்ளன.

இது தொடர்பான முதல் நகர்வாக ஜேவிபியும் சுதந்திர மக்கள் சபையும் சந்தித்துப் பேசியுள்ளன. சுதந்திர மக்கள் சபை என்பது பொது ஜன பெரமுனவில் இருந்து பிரிந்த நாடாளுமன்ற ☞2

## நீர்த் தொட்டியில் வீழ்ந்து 2 வயதுக் குழந்தை சாவு

### நெளுக்குளத்தில் பரிதாபம்

வவுனியா மாவட்டம் நெளுக்குளம் பகுதியில் நீர்த்தொட்டியில் வீழ்ந்து இரண்டு வயதுபெண்குழந்தைஒன்றுஉயிரிழந்துள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தப் பரிதாபகரமானசம்பவத்தில்லிங்கராஜாதிவிக்கா நீரில் மூழ்கி மூச்சுத் திணறி உயிரிழந்தார்.

வீட்டுமுற்றத்தில்விளையாடிக்கொண்டிருந்த சிறுமி திடீரெனக் காணாமற்போன நிலையில் பெற்றோர் அவரைத் தேடினர்.

கிணற்றின்அருகில்இருந்தநீர்த்தொட்டியில் குழந்தையின் சடலத்தைக் கண்டுபிடித்தனர்.

வைத்தியசாலைக்கு எடுத்துச் ☞2

## நிலையியற் கட்டளைகளைத் திருத்த எதிர்க்கட்சிகளின் ஆதரவு வேண்டும்

ஆளும் தரப்பு கோரிக்கை

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தயாராக உள்ளதோடு எதிர்க்கட்சி யோசனைகளைமுன்வைத்து ஆதரவினை வழங்க வேண்டுமெனசபைமுதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில பிரேமஜயந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம்எதிர்க்கட்சிப் பிரதம கொரடாவும் ஐக்கிய மக்கள்சக்தியின்நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த விடயங்களுக்குபதிலளிக்கும் போதேஅவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர்கள்நாடாளுமன்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுவதால் நிலையியற் கட்டளைகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளதை ☞2

## கிழக்கில் 2 கட்டங்களாக சுற்றுலாதுறை அபிவிருத்தி

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை இரண்டு கட்டங்களின்கீழாகஅடுத்த10 வருடங்களில் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அம்பாறைமாவட்டத்தில் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடன் நேற்றுக் காலை நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு நமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாக நாம் கடனாளி நாடாக மாறினோம். அரசு முன்னெடுத்துள்ள சரியான வேலைத்திட்டத்தினால் இந்த வருடம் நாம் வங்குரோத்து நிலையில் இருந்துவிடுபட்டாலும்அந்தக் கடன்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளது.

நாட்டை ☞2

## புறப்படுகிறார் பாக்லே வருகிறார் சந்தோஸ் ஜா

இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் கோபால் பக்லே எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் தமது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ளதோடு புதிய உயர்ஆணையராக ஐரோப்பியஒன்றியத்திற்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவை நியமிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

2020ஆம் ஆண்டு ஜூலை 17 முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவராக உள்ளசந்தோஷ்ஜா, 2019இல் உஸ்பெஸ்கிஸ்தானுக்கான தூதுவராவும், அதற்கு முன்னதாக 2017முதல் 2019வரையில் பிரதி செயற்பாட்டுஅதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் போர்முடிவுக்குவந்த ☞2

## தொடருந்து சேவைகள் வழமைக்கு திரும்பின



தொடருந்துதிணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்துரயில்வேமின்சார தொழில்நுட்ப ஊழியர்கள் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தை ரயில்வே நிலையத்தில் கடமையாற்றும் உப தொடருந்துக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் தொடருந்து தொழில்நுட்பஉத்தியோகத்தர் ஒருவருக்கும் இடையில் அண்மையில் முரண்பாடு ஏற்பட்டிருந்ததையடுத்து தொடருந்து மின்சார தொழில்நுட்ப ஊழியர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதற்குஎதிர்ப்புதெரிவித்து தொடருந்து மின்சார தொழில்நுட்ப ஊழியர்கள் தொழிற்சங்கநடவடிக்கையில் ஈடுபட்டமையால், கடந்த இரண்டு நாட்களாக கொழும்பில் இருந்து முன்னெடுக்கப்படும் ரயில் சேவைகள் தாமதமாகியிருந்தன. ☞2

## வலுச்சக்தித் துறைக்கு ஆசிய வங்கி ஆதரவு

இலங்கையின் வலுச்சக்தித் துறையின் பல்வேறுதிட்டங்களுக்கு ஆதரவளிப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்கபுஃமி கடோனோதெரிவித்துள்ளார்..

நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மேம்பாட்டுக்குமுழுமையானஆதரவை வழங்குவதற்கு தயாராக உள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு சமாந்தரமாக இலங்கைக்கு ☞2

## 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' நட்டஈடு குறித்து நாடாளுமன்றில் அமைச்சர் விளக்கம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான நீதிமன்ற விசாரணைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் நடவடிக்கை எடும்போமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக்குழுஎக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையை விமர்சித்து வெளியிட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல்தொடர்பானநீதிமன்ற விசாரணைகளுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ☞2

## குற்றவாளிகளான எம்.பிக்களை பதவியிலிருந்து நீக்க வேண்டும்

லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர்களின் குற்றம் நிரூபிக்கப்படும்போது அவர்களைப் பதவி நீக்க முடியும் வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம், சபை முதல்வரும்அமைச்சருமான சுசில்பிரேமஜந்தமுன்வைத்த சிறப்புரிமைமீறல்தொடர்பான கோரிக்கையை அடுத்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு நீதிபதிகள் அழைக்கப்படுகின்றனர். அதேபோன்று தங்கம் கொண்டுவந்தநாடாளுமன்ற உறுப்பினரும்இந்தகுழுவுக்கு அழைக்கப்படுகிறார், இது நல்ல விடயமல்ல.

சிறப்புரிமை குழுவினால் அலி ☞2

## கஜேந்திரகுமார் எம்.பி. வீடு முன்பாக தேரரோடு 5 பேர் மட்டும் போராட்டம்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்பாக நேற்று பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தலைமையிலான சிறு குழுவினர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே இந்தப் போராட்டம் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கொள்ளுப்பிட்டி, குயின்ஸ் வீதியில் அமைந்துள்ள கஜேந்திரகுமாரின் இல்லத்துக்கு முன்பாக காலையிலேயே பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. நீர்த்தாரை வாகனமும் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில அங்கு வருகை தரவில்லை. முற்பகல்10.30மணியளவில் அங்கு வருகைதந்த பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தலைமையிலான ஐந்து பேர் அடங்கிய குழுவினர், எதிர்ப்புக்குரல்எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட முற்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கஜேந்திரகுமாரின் இல்ல நுழைவாயில் ☞2

## பெண் துஸ்பிரயோகங்களை விசாரிக்க பொலிஸ் நிலையங்களில் தனி அறை

வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் கீதா வலியுறுத்து

பெண்களில்பலர்தமக்கு நிகழும் துஸ்பிரயோகங்கள் குறித்துபலர்முன்னிலையில் முறையிடுவதற்குத் தயங்குகிறார்கள். அதனால் அத்தகைய முறைப்பாடுகளை விசாரிக்கவென பொலிஸ் நிலையங்களில்தனிஅறைகள் உருவாக்கப்படுவதுடன் விசாரணைக்கெனதனியான மகளிர் பொலிஸாரும் நிமிக்கப்படவேண்டும்என்று வலியுறுத்தினார் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில்நேற்றுசெய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர்இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

குழந்தை பிறந்தது முதல் 18 வயது வரை சிறுவர்களாகவே கருதப்படுகின்றார்கள். எனவே அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி என்பன தொடர்பில் நாம் கவனம் செலுத்தவேண்டும். அந்த வகையில் எமது ஆட்சியும் இவ்விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தி வருவதுடன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள்முன்னெடுப்படுகின்றன.

அதன்படி, ஒரு குழந்தை பிறப்பதற்குமுன்னரே அந்தக் குழந்தையின் போசாக்கு குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளதால், குறை போசாக்குள்ள கர்ப்பிணித் தாய்மார்கள், போசாக்கான உணவைப் பெறுவதற்கானகொடுப்பனவு அட்டை வழங்கும் ☞2

தங்க நகை கடத்தலில் ஈடுபட்ட

## அலிசப்ரி ரஹீம் எம்.பி. மீது விசாரணை நடத்தவேண்டும்

சபை முதல்வர் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்க நெறியையும் மேன்மை பொருந்திய நாடாளுமன்றம் மற்றும் உறுப்பினர்களின் சிறப்புரிமையும்மீறியுள்ளமையால் நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சபை முதல்வரும் கல்வி அமைச்சருமானசுசிலபிரேம ஜயந்த வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம்சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் 2023.05.23 அன்று கட்டுநாயக்கவிமானநிலையத்தில் சட்ட விரோதமான முறையில் 3 கிலோ ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உறுப்பினர்களைக்கொண்ட அமைப்பு. முன்னாள் அமைச்சர்களானஜி.எல்.பீரிஸ், டலஸ்அழகப்பெருமபோன்றவர்கள் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த இரு தரப்பினருக்குமான சந்திப்பு பெலவத்தவில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

டலஸ்அழகப்பெருமதலைமையிலான குழுவினரும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினரும் பங்கேற்று, ஜனநாயகத்துக்கு எதிரான ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு பதிலளிக்கும் வகையில் இணைந்து செயற்படுவது பற்றி ஆராய்ந்துள்ளனர்.

இதுமுதல்கட்டப்பேச்சுத்தான் என்கின்றன சுதந்திர முன்னணித் தகவல்கள். ஜனநாயகத்திற்கு எதிரான அரசின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்நடவடிக்கைகளை எடுப்பதுபற்றிப்பேசப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ்அழகப்பெருமா,இந்தச் சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்தாலும், ஜனாதிபதித் தேர்தலில் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பது தொடர்பாகவே முக்கியமான முதல் கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. இந்த முதல்கட்ட பேச்சின்பின்னர்தொடர்ந்தும் பேச்சு நடத்தி இணைந்து செயற்பட முயற்சிக்கவும் இரு தரப்பினரும் இணங்கியுள்ளனர்.

ஒரு பக்கத்தில் பெரமுனவையும் ஐக்கிய மக்கள் சக்தியையும்உடைத்துஅந்தக் கட்சிகளில் இருந்து சிலரை இணைத்துக்கொண்டு புதிய கூட்டணி ஒன்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்குதலைகீழாக நின்று பணியாற்றி வருகையில், மறுபக்கம் அவருக்கு எதிராக ஒரு பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்கான முயற்சிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இந்தக் கூட்டணியில் ஜேவிபியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் ஓரணியாக இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமல்ல என்கிறார்கள் அரசியலை நன்குணர்ந்தவர்கள். விரைவிலேயே இந்த முயற்சிகள் முடிவுக்கு வரும் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கும்நிலையில் அடுத்த 6 மாதங்களுக்கு இது போன்ற அரசியல் பரபரப்புக்களுக்குப் பஞ்சம் இருக்காது வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அதிகாரப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையை இந்தியாவுக்கு எழுதிக் கொடுக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க தற்போது அந்த ஒப்பந்தத்தை விரிவாக்கம் செய்யவே முனைகிறார்.

அவர் கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் சென்று வட மத்திய மாகாணத்தையும் இந்தியாவுக்கு எழுதிக் கொடுக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார். 624 சதுர மைல் என்பது கிட்டத்தட்ட கொழும்பு மாவட்டத்திற்கு நிகரான பகுதியாகும். அதனைஅவர்இந்தியாவுக்கு வழங்குவதற்கு முயற்சிக்கின்றார்.

திருகோணமலையின் சுமுது கிராமத்தில் உள்ள மக்களை எந்தவித நிர்மாணங்களையும் செய்ய வேண்டாம் என்று எழுத்து மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த இடம் மீண்டும் அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அந்த கிராமத்தில் 144 குடும்பங்கள் உள்ளன. அவைவெளியேறவேண்டும் என்ற அடிப்படையில்தான் தற்பொழுது எழுத்து மூலம் அறிவிப்புவழங்கப்பட்டுள்ளது.

அந்தமக்களைவெளியேற்றுவது தொடர்பில்நேற்றைய தினம் கலந்துரையாடப்பட்டிருக்கின்றது அது தொடர்பானநடவடிக்கைகள்அடுத்து வரும் நாட்களில் எடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் செப்டம்பர்மாதம்இரண்டாம் திகதி இந்தியாவினுடைய பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வருகிறார். அவர் வருகின்ற பொழுது எண்ணெய்குழாய்வழித்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்காகவே ரணில் விக்கிமசிங்க இந்த மக்களை அவர்களின்சொந்தப்பகுதியில் இருந்து வெளியேற்ற முனைகின்றார். இதன்மூலம் மக்கள் ஆணையில்லாத அவர் அதிகாரப்போட்டியை வலுப்படுத்துகின்றார். அத்துடன் இலங்கையுடன் இந்தியா எவ்வாறு அரசியல் செய்கின்றது என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது - என்றார்.

## குற்றவாளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சப்ரி ரஹீமுக்கு எதிராக அவர் குற்றம் செய்திருக்கிறார் என அறிக்கை ஒன்றை விடுத்தாலும் அவருக்கு எதிராகநாடாளுமன்றத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. இது தொடர்பாக கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதும் நான் தெரிவித்திருந்திருந்தேன்.

அதனால் நாங்கள் அனைவரும்ஒன்றிணைந்து, ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்நாடாளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்ற பதவியில் இருந்து நீக்கும் சோல்பரி யாப்பில் இருக்கும்உறுப்புரிமையை, அரசிலயமைப்பு திருத்தம் ஊடாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைக்கிறேன்.

1956இல் இவ்வாறு ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் 4பேர் நாடாளுமன்றத்தில் இருந்து பதவி நீக்கப்பட்டதும் இந்த உறுப்புரியை அடிப்படையிலாகும். இந்த பிரச்சினைக்கு தீர்வொன்றை பெற்றுக்கொள்வதாக இருந்தால் இதனையே செய்யவேண்டும்-என்றார்.

இதற்கு சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜந்த பதிலளிக்கையில், கட்சித் தலைவர்கள்கூட்டத்திலேயே சிறப்புரிமை பிரச்சினையை கொண்டுவரதீர்மானித்தோம். இதனை அவ்வாறே மேற்கொள்வதுடன் அடுத்த கட்ட நடவடிக்கையாக நீங்கள் முன்வைத்த பிரேரணை தொடர்பாக நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## எக்ஸ்பிரஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படும்வகையில் நாங்கள் செயற்படப்போவதில்லை. ஆனால் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் கடல் சூழலுக்கு பாதிப்புஏற்படுவதற்குமுன்னர் நியூ டயமண்ட் கப்பலால் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

நியூ டயமண்ட் கப்பலில் இருந்து எண்ணெய் கசிவு ஏற்பட்டதன் மூலம் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பின் மூலம் அரசு பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அதேபோல் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அழிவு ஏற்படும்போது பிழையான முறையில் அரசு செயற்பட்டது.

அதாவது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் அழிவினால் நீர்கொழும்பு கடற்கரையில் இருந்து பாணந்துரை கடற்கரை வரையான பிரதேசமே பாதிக்கப்பட்டுள்ளதாக பிழையான முறையில்குறித்தநிறுவனங்கள் தீர்மானத்துக்கு வந்திருந்தன. ஆனால் பல்வேறு குழுக்கூட்டங்களில் இது தொடர்பாக கேள்வி எழுப்பியபோது, நீர்கொழும்புக்கு அப்பால் புத்தளம், மன்னார் மாவட்டங்களிலும் களுத்துறை, காலி முதல் அம்பாந்தோட்டைமாவட்டகடல்வளத்துக்கும்பாதிப்புஏற்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனால் இந்த விடயத்தில் அரச நிறுவனங்கள் நேர்மையாக செயற்படுகின்றதாஎன்றகேள்விஎமக்கு இருக்கிறது. அதனால் அது தொடர்பில் கேள்வி எழுப்ப நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. என்றாலும் இது தொடர்பானநீதிமன்றநடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாமல் இதனை மேற்கொள்ள வேண்டும்என்பதைநாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

பேர்ள் கப்பலின் அழிவால் நீர்கொழும்பில் இருந்து பாணந்துரை வரையானபகுதியேபாதிக்கப்பட்டுள்ளதாக தற்போதும் தெரிவிக்கின்றனர்.

அதனடிப்படையிலேயே இதற்கான நட்டஈடு கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுதவறு. அதனால் எமக்கு எங்குதவறினோம்என்பதை தேடிப்பார்க்கஎமக்குஉரிமை இருக்கிறது - என்றார்.

## நிலையியற்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்கின்றேன்.

நாடாளுமன்ற கௌரவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் பல உறுப்பினர்கள் செயல்படுவதுடன், நிலையியற் கட்டளைகளை மதிக்காதும் செயல்படுகின்றனர்.

நாடாளுமன்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில்செயற்படும்நாடாளுமன்ற உறுப்பினர்களை சபை செயல்பாடுகளில் இருந்தும் நாடாளுமன்றத்தில் இருந்தும் வெளியேற்றும் வகையில் நிலையியற் கட்டளைகளைதிருத்துவதற்கு எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்த ஆளும் கட்சி தயாராகவுள்ளது -என்றார்.

## வலுச்சக்தித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கக்கூடிய ஆதரவை ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ச்சியாக வழங்கும்.

மேலும், சிறு மற்றும் நடுத்தர அளவிலானதொழில் முயற்சிகள் தொடர்பிலும் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நிலையில், நெருக்கடி நிலைமையில் இருந்துமீள்வதற்கானஇலங்கையின்அர்ப்பணிப்பைநாம் பாராட்டுகின்றோம்-என்றார்.

## தொடருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில், தொடருந்துமின்சாரதொழில் நுட்ப ஊழியர்கள் ஆரம்பித்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன், வழமையான கால அட்டவணைக்கு அமைய தொடருந்துகள் இயக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கஜேந்திர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டிருந்த நிலையில், சுமார் ஒருமணி நேரம் வரையில் அங்கு நின்று குரல் எழுப்பிய அக்குழுவினர் பின்னர் இல்ல நுழைவாயிலை நோக்கி நகர முற்பட்டனர். பொலிஸார்சீலரத்னதேரர்தலைமையிலான குழுவினரை முன்னேறவிடாமல் தடுத்தனர்.

அதனை எதிர்த்துக் குரலெப்பிய சீலரத்ன தேரர், "கஜேந்திரகுமாரை வரச்சொல்லுங்கள். நீங்கள் கஜேந்திரகுமாருக்குப் பயப்படுகிறீர்களா? நீங்கள் அனைவரும்கஜேந்திரகுமார் மற்றும் கஜேந்திரனைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள். ரணிலும் பயப்படுகிறார். மஹிந்தவும் பயப்படுகிறார். கோட்டாபயவும்அதனால்தான் வெளியேறினார். தற்போது வட, கிழக்கு மாகாணங்கள் இவர்களுக்கு வேண்டிய விதத்தில் இயங்குகின்றன. நாங்கள் இப்போது செல்கின்றோம். ஆனால் மக்களைத்திரட்டிக்கொண்டுமீண்டும் வருவோம். அப்போது உங்களால் என்ன செய்ய முடிகிறது என்று பார்ப்போம்! உங்களால்எங்களைத்தடுக்க முடியுமாஎன்பதைநினைவில் வைத்துக்கொள்ளுங்கள்" என்றுபொலிஸாரைப்பார்த்து உரத்த தொனியில் கத்தினார். அதன் பின்னர் அவர்கள் வெளியேறிச் சென்றார்கள்.

## அலிசப்ரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிராமுக்கும்அதிகமானதங்கம் மற்றும் பெருமளவிலான ஸ்மார்ட் தொலைபேசிகளை நாட்டுக்கு கொண்டு வர முயற்சித்துசுங்கதரப்பினரால் கைது செய்யப்பட்டார்.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு 75 இலட்சம் ரூபா தண்டப் பணம்விதிக்கப்பட்டு,விடுவிக்கப்பட்டார். இவர் தனது இராஜதந்திர கடவுச்சீட்டு, விமான நிலையத்தின் பிரமுக்கள் வெளியேறும் முனையம் ஆகியவற்றை முறைக்கேடான வகையில் பயன்படுத்தியுள்ளார்.

கைப்பற்றப்பட்ட 07கோடி பெறுமதியானதங்கம்மற்றும் ஸ்மார்ட் தொலைபேசிகளை சுங்கத் திணைக்களம் அரசுடமையாக்கியது. இச்சம்பவம் தொடர்பில் சுங்கத் திணைக்களம் 2023.06.14 அன்று நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 2018.03.07 அன்று நாடாளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக் கோவையை மீறியுள்ளார்.அத்துடன்மக்கள் பிரதிநிதிஎன்றஅடிப்படையில் மக்களின்நம்பிக்கையையும் சிதைத்துள்ளார்.

இவரதுசெயற்பாட்டினால் மேன்மை பொருந்திய நாடாளுமன்றத்தினதும், சகல நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தைநாடாளுமன்றத்தின்நிலையியல்கட்டளையின் 118ஆவது பிரிவுக்கு அமைய நாடாளுமன்ற சிறப்புரிமைமற்றும்ஒழுக்கவியல்குழுஊடாகமுழுமையான விசாரணைகளை மேற்கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## நீர்த்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்பட்டபோது சிறுமி உயிரிழந்துவிட்டதாக உறுதிப்படுத்தப்பட்டது. (100)

## கிழக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றுவதற்குஅந்நியச் செலாவணி அவசியம். எனவே,வர்த்தகநிலுவையை நமக்குச்சாதகமாகப்பராமரிக்காவிட்டால், இன்னும் 10 ஆண்டுகளில்கடன்அதிகரித்து மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதை தவிர்ப்பதற்காக, புதிய திட்டங்களைச் செயல்படுத்தமுடிவுசெய்துள்ளோம். கிழக்கு மாகாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக புதிய திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படிதிருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்குஇந்தியாவின் ஆதரவு கிடைத்துள்ளது.

மகாவலிதிட்டத்தின்இடது கரையிலுள்ள காணிகளில் ஒரு பகுதியை உள்ளடக்கி அபிவிருத்திநடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தும்போது, சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதலீட்டு வலயமும் உருவாக்கப்படஉள்ளது.

சுற்றுலாத்துறையை முன்னேற்றும்அதேவேளை, விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கும்நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். இப்பகுதியில் மிகவும் வறிய மக்கள் வசிக்கின்றனர். அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

அம்பாறைமாவட்டத்தில் மீன்பிடித் துறையை நவீனமயமாக்கலைப் போன்றே, விவசாயநவீனமயமாக்கலும் மேற்கொள்ளப்படவேண்டும். நெல் பயிற்செய்கையின் ஊடாக ஒரு ஹெக்டெயரில் இருந்து குறைந்தது 07, 08 மெற்றிக் டொன் அறுவடையாவது பெறவேண்டும். கால்நடை வளர்ப்பு தொடர்பாகவும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் பத்தாண்டுகளில், இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாகவும், அதன் பிறகு ஒரு கோடியாகவும் அதிகரிக்கப்படவேண்டும்.

2035ஆம்ஆண்டுக்குள், உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதம் சுற்றுலாத் துறையிலிருந்து கிடைக்கும் என்று அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, அவர்களின் பங்களிப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கமையவருடாந்தம் இப்பிரதேசத்திற்கு குறைந்தபட்சம் 10-20 இலட்சம் சுற்றுலாப்பயணிகளையாவது கொண்டுவர வேண்டும். ஒரு சுற்றுலாப் பயணி தினமும் 300 அல்லது 500 டொலர்கள் செலவு செய்யும்வகையில்திட்டங்கள் தயாரிக்கப்படவேண்டும். அது தொடர்பான திட்டங்களை கிழக்கு மகாணத்தில் இருந்து செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, ஒரு வித்தியாசமான சுற்றுலாத் துறைஉள்ளது.ஒருபகுதியினர் இந்த மாகாணங்களுக்கு வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ள நீர்ச்சறுக்கு போன்ற விளையாட்டுகளைஇங்குஊக்குவிக்க வேண்டும். இப்பகுதியை சுற்றுலா வலயமாக மாற்ற வேண்டும்.

இந்தநகரமற்றும்கிராமத்தின் அபிவிருத்திக்கான திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சுற்றுலா வளர்ச்சியையும், மக்களின் வாழ்க்கையையும் ஒருபோதும் குழப்பிக் கொள்ளக் கூடாது.

அத்துடன் அம்பாறை பஸ் நிலைய அபிவிருத்தி தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும். அம்பாறை மாவட்டத்திற்கு வரும்சுற்றுலாப்பயணிகளை சில நாட்கள் தங்க வைக்க முறையான ஏற்பாடு அவசியம்.

மேலும், முழு நாட்டையும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக மாற்றவும், சுற்றுலாத் துறையின் வருமானத்தைஅதிகரிக்கவும் முயற்சிகள்மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார்.

## பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், பிரதேச செயலக ரீதியில் இந்தச் செயன்முறைமுன்னெடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு அரச தாய் - சேய் நல மத்திய நிலையங்களில் பதிவு செய்த, கர்ப்பிணித் தாய்மார்களுக்காக அங்கு நடைபெறும் கிளினிக்களுக்கு வருகை தருகின்றவர்களில்போசாக்குக் குறைபாடு உள்ளவர்கள் என்று அடையாளம் காணப்படுபவர்களுக்கு இந்தக்கொடுப்பனவு அட்டை வழங்கப்படுகிறது. இந்த வருடத்திற்கு மாத்திரம், கர்ப்பிணித்தாய்மார்களுக்கு கொடுப்பனவு அட்டை வழங்குவதற்காக அரசு 11 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அதேபோன்று, பாடசாலை செல்லும் மாணவர்களில்குறைந்தவருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு போசாக்கான காலை உணவை வழங்கும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியிலும், இயலுமான வரை சிறுவர்களின் உணவு, சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களுக்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம்இந்நாட்டில்இயங்கும் முன்பள்ளிகள் தொடர்பில் அரசு அவதானம் செலுத்தி வருகிறது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுவர்களின் கல்வி மாத்திரமன்றி அவர்களுடன் பேணப்பட வேண்டிய உறவு மற்றும் அவர்களின் பாதுகாப்பு, தொடர்பிலும் அவசியமான பயிற்சிகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

முன்பள்ளிகள்இயங்கும் சூழல், ஆசிரியர்களின் தகைமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கண்காணிக்கும் வேலைத் திட்டமொன்றைநடைமுறைப்படுத்தவுள்ளதோடுஅதுதொடர்பில் சட்ட வரையறைகளை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம்.

மேலும், முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமை மாத்திரமன்றி பல வருடகால அனுபவத்தின் ஊடாக சிறப்பாக முன்பள்ளிகளை நடத்தி வருபவர்களையும் இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் கல்வித் தகைமை மற்றும் பயிற்சி பெற்ற ஒருவருடன் அனுபவமிக்க ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்துஇந்தமுன்பள்ளிகளை சிறப்பாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கானசம்பளம் தொடர்பிலும் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பாடசாலை மட்டத்தில் சிறுவர்களை தெளிவூட்டுவது குறித்து பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளில் மாத்திரமன்றிசிறுவர்களுக்கு நிகழும் எந்தவொரு துஷ்பிரயோகம்தொடர்பிலும்அவர்கள் தமதுபெற்றோரிடம்முறையிடத்தயக்கம் காட்டுகின்றனர்.

எனவே சிறுவர்கள் அதிகளவில்தமதுநேரத்தைக் கழிப்பது பாடசாலைகளில் என்பதனால்,பாடசாலைகளில் சிறுவர் உளவளத்துணை ஆலோசகர்களைநியமித்தல் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான துஷ்பிரயோகம்தொடர்பான சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன. சில பெண்கள் தங்களுக்கு இடம்பெற்ற துஷ்பிரயோகம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடவிரும்புவதில்லை.

எல்லோர் முன்னிலையிலும் இவ்விடயங்கள் குறித்துகூறுவதற்குபெண்கள் வெட்கப்படுகிறார்கள். அந்த வகையில், இவ்வாறான முறைப்பாடுகளை விசாரிக்கவென பொலிஸ் நிலையங்களில்தனியானஅறைகளை ஒதுக்குவதுடன் தனியான மகளிர் பொலிஸாரையும் நியமிக்க வேண்டும்.

எனவே, அத்தகைய பெண்களைக்கையாள்வதில் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவும் வேண்டும். மேலும், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் மற்றும் கொலைகள் தொடர்பாக, ஊடக நிறுவனங்கள் செய்திகளை வெளியிடும்போது யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சுய ஒழுக்கத்தின் கீழ் செயல்படுவதில் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## புறப்படு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர்ஐரோப்பியஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையில்மேற்கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் எட்டப்படுவதற்கான பேச்சுக்களிலும் அவர் பங்கேற்றிருந்தார். அத்தோடு, ரஷ்யா,அமெரிக்கா,ஆகியவற்றுடனானஉடன்பாடுகளிலும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன், இணைவழி பாதுகாப்பு, தீவிரவாதத்துக்கு எதிரான செயற்பாடுகள், அணுவாயுதம் மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்பம் குறித்த ஒப்பந்தங்கள் தொடர்பிலும்மிகநெருக்கமாக செயற்பட்டுள்ளார்.

மேலும், ஆங்கிலம், ரஷ்யா, ஹிந்தி ஆகிய மொழிகளில் சரளமாக உரையாடக்கூடியவராகவும் உள்ளார்.


டிசெம்பர் மாதத்துடன், அஸ்திரேலியாவுக்கான இந்திய உயர்ஆணையராக இருக்கும்மன்பிரீத்வோஹ்ராவின் சேவைக்காலம் நிறைவுக்கு வரும்நிலையில் அப்பதவிக்குகோபால்பாக்லே நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




காலைக்கதிர் Kalaikkathir

# இனவாதத்தைத் தூண்டி நாட்டை போருக்குள் தள்ளும்செயல் உடன் நிறுத்தப்படவேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல் பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தைத்தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அது அனைவரது பொறுப்பாகும் என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இருபத்தேழு இரண்டின் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலை பௌத்த மரபுரிமைகளை கொண்டுள்ளது. மகாவம்சம் உட்பட பௌத்த வரலாற்று நூல்களில் குருந்தூர் மலை குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1933 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குருந்தூர் மலையில் 78 ஏக்கர் நிலப்பரப்பு தொல்பொருள் மரபுரிமை என்று வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டது.

மறுபுறம் 1,250 ஹெக்டயர் நிலப்பரப்பை கொண்டுள்ள நாகசோல வனப்பகுதியில் பௌத்த மரபுரிமைகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல் பொருள் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன.

தமிழர்களுக்கு சட்ட அந்தஸ்துடன் காணிகளை வழங்குவதைநாங்கள்எதிர்க்கவில்லை. வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள், தொல்பொருள் மரபுரிமைகள்ஆகிய- வற்றை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும்காணிபிரச்சினைக்கு காணி ஆணைக்குழு ஊடாக தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல் பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்.

இனவாதத்தைத்தூண்டி விட்டு நாட்டில் மீண்டும் யுத்தத்தைத் தோற்றுவிக்கும் செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டும். அதுஅனைவரது பொறுப்பாகும். - என்றார்.

அத்துடன், குருந்தூர் மலை விவகாரம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிப்பதைஅமைச்சர்விதுர விக்கிரமநாயக்க தவிர்த்துக் கொண்டார்.

குருந்தூர் மலை விவகாரம்நீதிமன்றவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் அந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றுவது, எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பது முறையற்றது என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சபையில் குறிப்பிட்டார். (05)

# இந்திய இளைஞர்களிடம் பாடம் கற்கவேண்டுமாம்

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்



எம்முடைய இளைஞர் சமுதாயமும் இந்திய இளைஞர் சமுதாயத்திடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸதெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவின் இந்த திட்டத்துக்காக பில்லியன் கணக்கான நிதி செலவாகும் போது நாட்டில் ஏழைகள் இருக்கின்றார்கள், அடிப்படை வசதிகள்இல்லாமல்இவ்வளவு பேர் இருக்கின்றார்கள்.

கல்விஇல்லாமல் இவ்வளவு பிள்ளைகள்இருக்கின்றார்கள் என்று இந்த சந்தோசத்தைஅழிக்க நினைக்கும் மோசமான இளைஞர்கள் இந்தியாவில்இல்லை.

இந்தியாவிலுள்ள இளைஞர்கள்எந்தமதமாக இருந்தாலும் எந்த ஜாதியாக இருந்தாலும் தங்கள் தேசிய கொடியுடனும் தங்கள் தேசியத்துடனும் உணர்வுபூர்வமாக இணைந்துஇருக்கின்றார்கள்.

எம்முடைய இளைஞர் சமுதாயமும் இந்திய இளைஞர் சமுதாயத்திடம் பாடம் கற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றேன்.

நிலவின்தென்துருவத்தில் முதலாவதாக விண்கலத்தை தரையிரக்கி சாதனை படைத்த இந்தியாவிற்கு எமது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றோம். - என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# இனங்களுக்கிடையிலே மோதல் உருவாக்க சதி மக்களே விழிப்படையுங்கள் என்கிறார் முஜிபுர்



குருந்தூர் மலை விவகாரம் மற்றும் மட்டக்களப்பு காணி பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இனங்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும் வகையில் தூண்டுதல் மேற்கொள்ளப்படுகிறது.

நாட்டில் இனரீதியான மோதலை உருவாக்கி தற்போது உள்ள அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் தக்க வைத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் சதித்திட்டங்களா என்ற சந்தேகம் எழுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில்நடைபெற்றஊடகவி- யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அண்மைக்காலமாக குருந்தூர் மலைபிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இனப்பிரச்சினையை தூண்டும்விதமாகசிலர்கருத்துக்களை வெளியிடுகின்றமை மற்றும் செயற்பாட்டு ரீதியாக தலையிடுவது என்பவற்றை நாம் காண்கிறோம்.

மட்டகளப்பில் காணிப்பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டு இரண்டு இனங்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும் வகையில் தூண்டுதல் மேற்கொள்வதை அவதானிக்க முடிகிறது.

மேலும்நாட்டின் இனங்களுக்கு இடையில் மோதல் ஏற்படலாம் என இந்திய புலனாய்வு பிரிவினர் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அறிவிப்புகள் மற்றும் கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவங்களைப் பார்க்கும் போது இந்த பிரச்சினைகள் அனைத்தும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளன என்பது புரிகிறது.

திட்டமிட்டு இதனைச் செய்து மீண்டும் நாட்டில் இனரீதியான மோதலை உருவாக்கி தற்போது உள்ள அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆட்சியில் தக்கவைத்துக்கொள்ள மேற்கொள்ளப்படும் திட்டங்களா? என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே நாம் மக்களுக்கு கூறுகிறோம். விழிப்புணர்வுடன் இருங்கள். தங்களது ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள ராஜபக்ஷ தரப்பினரும், விக்கிரமசிங்க தரப்பினரும் இணைந்து சதி திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நாம் கண்டோம். இந்த சதித் திட்டத்தின் மற்றுமொருவிளைவுஎன்பதுதற்போது வெளிவர ஆரம்பித்துள்ளது.

இன்று ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையில் வாசிக்கும் போது திருட்டு, குண்டர்கள், அரசியலவாதிகள் இனவாதத்தின் பின்னால் மறைந்து கொள்வது அறிகிறோம்.

வரலாற்றிலும், இதற்கு முன்னரும் கண்டோம். இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் திட்டமிட்டு நாட்டின் இனப்பிரச்சினை மற்றும் மோதலைஅரங்கேற்றப்படவுள்ளதா? என்பது எமக்கு தெரியாது.- என்றார். (05)





# 51 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் வறட்சியான காலநிலையால் பாதிப்பு

## நட்டஈடு வழங்க தீர்மானம் என்கிறார் ஹேரத்



வறட்சியான கால நிலையால்51ஆயிரத்து35 ஏக்கர்நெற்பயிர்ச்செய்கை 10 ஆயிரம் ஏக்கர் மரக்கறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஓர் ஏக்கர் விவசாய நிலத்துக்கு 40 ஆயிரம் ரூபா, ஒரு ஹெக்டேயர் விவசாய நிலத்துக்கு ஒரு லட்சம் என்ற அடிப்படையில் நட்டஈடு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறைஇராஜாங்க அமைச்சர் டி.பி ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது வறட்சியான காலநிலையால் சிறுபோக பயிர்ச்செய்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, விவசா- யிகளுக்கு வழங்கப்பட வேண்டியநட்டஈடுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நாட்டில்நிலவும்வறட்சியான காலநிலையால் 51,035 ஏக்கர் நெற் பயிர்ச் செய்கைகளுக்கும்,10 ஆயிரம் ஏக்கர் மரகறி உட்பட ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(புதன்கிழமை மதிப்பாய்வுக்கு அமைய) நெல், மிளகாய், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் சோயா ஆகிய பயிர்ச் செய்கைகளுக்குஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நட்ட ஈடு வழங்க மதிப்பாய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய ஓர்ஏக்கர் விவசாய நிலங்களுக்கு 40 ஆயிரம் ரூபா, ஒரு ஹெக்டேயர் விவசாய நிலங்களுக்கு ஒருலட்சம் ரூபா என்றஅடிப்படையில் நட்டஈடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் விவசாய நிலங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து இதுவரை மதிப்பாய்வு தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

வரறட்சியானகாலநிலையால்குருநாகல்மாவட்டத்தில் 15,305 ஏக்கர் விவசாய நிலம், மஹவ விவசாய வலயத்தில் 9,295 ஏக்கர் விவசாய நிலம், உடவளவ விவசாய வலயத்தில் 14,667 ஏக்கர் விவசாய நிலம், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1,892 ஏக்கர் விவசாய நிலம், புத்தளம் மாவட்டத்தில் 1,230 ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டுள்ளன. - என்றார். (05)






# புத்தளம் ஆதார வைத்தியசாலை துணை மருத்துவர்கள் போராட்டம்

புத்தளம்ஆதாரவைத்தியசாலையில் துணைமருத்துவர்கள்பல்வேறுகோரிக்கைகளை முன்வைத்து அடையாள பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சம்பளம் அதிகரிப்பு, மருந்துகள் தட்டுப்பாடுஎனபல்வேறுகோரிக்கைகளை முன்வைத்துஅவர்கள்இந்தஅடையாள பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தவகையில்கிளினிக், கதிரியக்க சேவை ஆகியன மூடிய நிலையில் காட்சியளித்தன.

இதனால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகிய நிலையில் திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. கள் நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குஆளுநரால்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில்கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவாளர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பொறுப்பும் நிதானமும் வேண்டும்

## இலங்கை வர்த்தக சபை சுட்டிக்காட்டு

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மிகவும்பொறுப்புடனும்நிதானத்துடனும் செயற்பட வேண்டும் எனவும் இது தவிர தற்போதைய சூழல் இருந்து மீண்டு வர வேறு எந்த வழிகளும் இல்லை எனவும் இலங்கை வர்த்தக சபையின் தலைவர் துமிந்த ஹூலங்கமுவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவி- யலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அரசாங்கத்தையும், எதிர்தரப்பையும் முதலீட்டில் ஈர்ப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடுத்துடுவது என்ற அடிப்படையிலேயே எமது அணுகுமு- றைகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போதும் அதற்காக நாங்கள் ஏன் அறிக்கை வெளியிடுவதில்லை என்று பலர் கேட்கிறார்கள். சில விடயங்கள் அரசாங்கத்துக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருக்கலாம்.வெறும் அறிக்கைகளை வெளியிடுவதை விட எப்பொழுதும் நாட்டைப் பற்றியே முதலில் சிந்திக்க வேண்டும் என்பதுடன் பங்குதாரர்கள், அரசாங்கம் மற்றும் எதிர்த்தரப்புடனான சூழ்நிலைகளை சிறப்பாகக் கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். நாங்கள் அவ்வாறே செயற்பட் டுள்ளோம். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எமது அணுகுமுறை சூழ்நிலையைச்சமாளிப்பதாகவே அமைந்துள்ளது. உதாரணமாக கடந்த ஆண்டு பொருளாதார வரலாற்றில் மிக மோசமானநெருக்கடியைபதிவுசெய்தது. சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நாடு பாதிப்பை சந்தித்தது எனலாம்.

மீண்டும் அனைத்து அரசியல் கட்சிகள் பங்குதாரர்கள் அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் பல அமைப்புக்களிடம் நெருக்கடியின் போது நாம் எப்படி தீர்வைக் காணலாம், மாற்றீடுகளை எப்படி கொடுக்கலாம், என்பது தொடர்பாகவும் தெளிவுபடுத்த வேண்டி இருந்தது. கடந்த ஆண்டை விட அந்த முயற்சியில்நாம்வெற்றிபெற்றுள்ளோம். ஒப்பீட்டளவில் ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். நீண்ட மின்வெட்டு, எரிபொருள் பற்றாக்குறை, நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் தேவை என எமது நிலை தொடர்ந்தது. தற்போது பொருளாதாரம், அரசியல்சூழ்நிலை, சமூக கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் நாம் சீரான கட்டத்தை அடைய இன்னும்நீண்டதூரம்பயணிக்க வேண்டி இருக்கிறது. இதற்காக நாம் கடந்த காலத்தில் இருந்து மீண்டு வர எவ்வாறு கவனமாக செயற்பட்டோமோ அவ்வாறே தொடர்ந்தும் செயற்பட வேண்டும். - என்றார். (05)

# மாத்தறை நீதிமன்றத்தின் வழக்குப் பொருளான துப்பாக்கியே திக்வெல்ல கொலைக்கு பாவிப்பு

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குப் பொருள்கள் அறையில் வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்றை திக்வெல்ல முதுகமுவ பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த15ஆம்திகதிதிக்வெல்ல, போடரகந்த பிரதேசத்தில் உயிரிழந்த மாத்தறை, உயன்வத்த தெற்கு பகுதியைச் சேர்ந்த 45 வயதான முதுகமுவ ஆராச்சி சஞ்சீவ என்பவரை கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட ரி-56 துப்பாக்கி என தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது.

மாத்தறைநீதிவான்நீதிமன்றபி.ஆர்.152/9 இலக்கம் கொண்ட ரி- 56 துப்பாக்கி மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்குப்பொருள்கள் அறையில் ஒப்படைக்கப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளதுடன், வழக்குப் பொருள்களை வெளியே எடுத்துச் சென்றமை தொடர்பில் விசேடவிசாரணைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கட்டாயம் செய்யப்படவேண்டும்

**நாடாளுமன்ற உறுப்பினர்களின் குற்றம் நிரூபிக்கப்படும்போது அவர்களைப் பதவி நீக்கக்கூடிய வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஸ்மன் கிரியெல்ல நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார். புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அலி சப்ரி ரஹீம் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். கட்டாயம் செய்யப்படவேண்டிய நடவடிக்கை இது. அனைத்துக் கட்சிகளும் இணைந்து இந்த அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளவேண்டும்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தபோது கட்டுநாயக்கா வானூர்தி நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 3 கிலோ தங்கம் மற்றும் தங்க ஆபரணங்கள் கைப்பற்றப்பட்டன. திறன் பேசிகள் (சிமாட் மொபைல்) பலவும் கைப்பற்றப்பட்டன. திறன் பேசிகளின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றையும் நாடாளுமன்ற உறுப்பினர் கடத்தி வந்திருந்தார்.**

**கடத்தல் பொருட்களைப் பறிமுதல் செய்த அதிகாரிகள் அலி சப்ரி ரஹீமுக்கு 75 லட்சம் ரூபாய் அபராதம் விதித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்கு கிடைத்திருக்கக்கூடிய சிறப்புச் சலுகைகளைப் பயன்படுத்தி இப்படிச் சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டது மக்களாட்சி மாண்பையே கேவலப்படுத்தியது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான மக்களின் நம்பிக்கையை முற்றாகச் சிதைத்து. நாடாளுமன்றத்தின் மதிப்பையும் தரமிழக்க வைத்தது. எனினும், தண்டப் பணம் விதிக்கப்பட்டதைத் தவிர அவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

**வழக்கமாக கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய நீதிமன்ற நடவடிக்கைகள்கூட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக எடுக்கப்படவில்லை. அவர் நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் வரையில் அவர் சுதந்திரமானவராக இருந்தார். இப்போதும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவே உள்ளார்.**

**இது ஏற்கக்கூடியதல்ல. குற்றம் செய்தவர் என்று நிரூபணமாகிய பின்னர் ஒருவர் மக்கள் பிரதிநிதியாக இருப்பது நியாயமற்றது. ஓர் குற்றவாளி நாடாளுமன்றத்தில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவது முறையற்றது; வெட்கக்கேடானது. எனவே குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும் வகையில் அரசமைப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படுவது அவசியம்.**

**தற்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் குற்றமிழைத்தார் என்று நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவினால் உறுதிப்படுத்தப்பட்டாலும்கூட அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையே தற்போது இருக்கின்றது. எனவேதான், ”நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து, ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றப் பதவியில் இருந்து நீக்கும் சோல்பரி யாப்பில் இருக்கும் உறுப்புரிமையை, அரசமைப்பு திருத்தம் ஊடாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்” என்று லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்தினார்.**

**சோல்பெரி யாப்பில் இருந்த அந்தச் சட்டத்தின்படி 1956இல் ஊழல் மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் 4 பேர் நாடாளுமன்றத்தில் இருந்து பதவி நீக்கப்பட்டனர் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.**

**இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்துப் பேசி அடுத்த கட்ட நடவடிக்கையை முன்னெடுக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார். அதற்கான முயற்சிகள் கட்டாயம் எடுக்கப்படவேண்டும். குற்றவாளிகள் நாடாளுமன்றத்திற்குள் நுழைவதைத் தடுப்பதற்கும் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்தவர்கள் குற்றம் செய்தால் அவர்களை உடனடியாக வெளியேற்றவும் வழி வகை செய்யப்படுவது மிக மிக அவசியம் என்பதால் உரிய சட்டத் திருத்தங்களை அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.**



# மைத்திரியின் வழியில் ரணில்!

உபுல் ஜோசப் பெர்னான்டோ

மைத்திரிபால சிறிசேன, அரசியலைமைப்பிற்கு முரணாக பிரதமர் ரணிலை நீக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக அமர்த்தியதுடன் 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு சரியாக 365 நாட்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை கலைத்தார். 2019 ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 18 என்று அறிவிக்கப்பட்டது. 2018 செப்டெம்பர் காலத்தில் மைத்திரிபால அரசியலின் உச்சத்தில் இருந்தார். இந்த நேரத்தில் அவர் தானே ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த பொது வேட்பாளர் என்று கனவு கண்டார். அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் இருந்தால் 2019 ஜனாதிபதி தேர்தலில் தான் பொது வேட்பாளராக முடியாது என்பதையும் அவர் புரிந்துகொண்டிருந்தார்.

“எனக்கு இன்னும் 365 நாட்கள் மட்டுமே உள்ளன...” என்று தன்னைச் சந்திக்க வந்த சகாக்களிடம் அவர் இப்படித்தான் கூறினார். எதுவும் செய்வதற்கில்லை என்று சோர்ந்து போயிருந்தார்.

365 நாட்களுக்குள் நீங்கள் ஏதாவது செய்யாவிட்டால் அடுத்த ஜனாதிபதியாக முடியாது என்று அவர்கள் மைத்திரிக்கு ஆலோசனை சொன்னார்கள்.

ரணிலை நீக்கிவிட்டு மகிந்தவை பிரதமராக்கினால் பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முடியும் என்பது, செய்வதறியாது நிர்க்கதியாக இருந்த மைத்திரிபாலவுக்கு ராஜபக்சே கொடுத்த கயிறு.

”நீரில் மூழ்கும் மனிதன் வைக்கோலில் தொங்கப் போராடுகிறான்”, அந்த 365 நாட்களிலும் மைத்திரிபால பயந்து நடுங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து அரசியல் தெரிந்தவர்கள் இப்படித்தான் சொன்னார்கள்.

அரசமைப்பை ஒரு பக்கம் தூக்கி எறிந்துவிட்டு மகிந்தவைப் பிரதமராக்கி நாடாளுமன்றத்தை மைத்திரி கலைத்தபோது அவரது அரசியல் நடவடிக்கைகள் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டன. அவர் அந்த சதியை 2019 ஒக்டோபரில் செய்தார். அப்போது மைத்திரி இன்னும் எத்தனை நாட்கள்தான் ஜனாதிபதிப் பதவியில் இருப்பார் என்று கணக்கிடப்பட்டுக்கொண்டிருந்தது.

“இந்த ஜனாதிபதிகளை அவர்களது கடைசி 365 நாட்களில் என்னமாக ஆவேசமடைகிறார்கள்?”

இதுபோன்று இதற்கு முன்னரும் நடந்திருக்கிறது. தனது கடைசி 365 நாட்களில் இப்படி ஆவேசமடைந்த மற்றொரு ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க. 1995 ஜனாதிபதித் தேர்தலில் டி.பி. விஜேதுங்க போட்டியிட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்பார். காரணம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி பண்டாரநாயக்கவுக்கும் அவரது மகள் சந்திரிகாவுக்கும் இடையில் யார் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவது என்பதில் இருந்த முரண்பாடு.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது டி.பி.க்கு ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் டி.பி., ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், தென் மாகாண சபையைக் கலைத்துவிட்டு, அதற்குத் தேர்தல் நடத்தினார். அதில் அவர் தோற்றார். அந்தத் தோல்விக்குப் பிறகு ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லவே பயந்தார். கட்சி அவரை எதிர்த்தபோது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்க வசதியாக முதலில் பொதுத் தேர்தலை நடத்த முடிவெடுத்தார்.

பொதுத் தேர்தலுக்கு ஒரு வருடம் இருக்கும்போதே ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அவர் பொதுத் தேர்தலுக்குச் சென்றார். அந்த நேரத்தில் அவர் செய்தது ஒரு அரசியல் சதிராட்டம். அதனால் ஐக்கிய தேசியக் கட்சி பேரழிவைச் சந்தித்து. விஜேதுங்க நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போகிறார் என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெறும் என நினைத்துத்தான் டிபி அதைச் செய்தார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றதும் ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லலாம் என்பதே அவரது திட்டமாக இருந்தது. ஆனால் அந்தப் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு 365 நாட்கள் இருந்த நிலையில் டி.வி.விஜேதுங்க இந்த அரசியல் பைத்தியக்கார சதிராட்டத்தை ஆடினார். மைத்திரிபோன்றே அவரும் செயற்பட்டிருந்தார். இந்த 365 நாட்களிலும் என்னவெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் விஜயதுங்க செய்தார். தற்போதைய நிலவரப்படி, 2024 ஜனாதிபதித் தேர்தலுக்கும் இன்னும் 365 நாட்கள் உள்ளன. ரணில் என்ன சதிராட்டத்தைப் போடுவார் என்பதைப் பார்க்க நாடே காத்திருக்கிறது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு 365 நாட்கள் இருக்கும் போது, அதில் முதல் 182 நாட்களுக்கு மட்டுமே - மாதங்களில் சொன்னால் 6 மாதங்கள் மட்டுமே - பதவியில் இருக்கும் ஜனாதிபதி எதைவேண்டுமானாலும் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார். ஏனெனில் அடுத்த 6 மாதங்கள் நாட்டை ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயார்ப்படுத்துவதிலேயே கழிந்துவிடும். அரசியல் கட்சிகள் தமது ஜனாதிபதி வேட்பாளர்களை அறிவித்துவிடும். அந்தக் காலப் பகுதியில் நீதித்துறை, பொலிஸார், அரச சேவைகள் எல்லாம் ஒப்பீட்டளவில் அதிக சுதந்திரத்தைப் பெற்றுவிடும். அதாவது அந்தக் கடைசி 6 மாதங்களும் ஜனாதிபதியின் கைகள் இறுக்கக் கட்டப்பட்டது போன்றதொரு நிலைதான் இருக்கும்.

அப்படிப்பார்த்தால் இன்னும் சுமார் 6 மாதங்களில் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளும் கட்டப்பட்டுவிடும்.

மைத்திரிபால மக்கள் ஆணையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி. 2018 உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலில் அவரது கட்சி சுமார் 12% வாக்குகளைப் பெற்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலம்மிக்க அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அவரோடு இருந்தனர். ஆனால் அவர் எந்தக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போகிறார் என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

அதனால் மைத்திரி அந்தக் காலப் பகுதியில் கடும் அதிருப்தியடைந்திருந்தார். 2019 செப்டெம்பர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தனது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தும் என்கிற அறிவிப்பின் மூலம் அவரது அதிருப்தி வெளிப்படையாகவே தெரிந்தது. கடைசியில் சுதந்திரக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளரை நிறுத்தவில்லை. அப்படி நிறுத்தினாலும் வெற்றிபெற முடியாது என்பது தெரிந்திருந்தது. மைத்திரியுடன் இருந்த சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மைத்திரிக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்பதைப் புரிந்து கொண்டு பொது ஜன பெரமுனவில் இணைந்தனர்.

### ரணிலுக்கும் இதே நிலை வருமா...? என்பதே இப்போதுள்ள கேள்வி

ரணிலின் ஊடகங்கள் பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சாவின் பெயரை ஓரிரு வாரங்களாக விற்பனை செய்து ரணில் புதிய கூட்டணியை உருவாக்கி வருகிறார், பொது ஜன பெரமுனவின் 50 முதல் 60 உறுப்பினர்கள் ரணிலுடன் கூட்டணி சேரவுள்ளனர் என்று செய்திகளைப் பரப்பி வருகின்றன. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பான இறுதி 365 நாட்களிலும் மைத்திரி விளையாடிய அதே விளையாட்டை ரணிலும் விளையாடுகிறார் போலுள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து பிரியும் 50 முதல் 60 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தலிக் களமிளங்குவார்கள் என்று ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

2018 செப்டம்பருக்கும் 2019 செப்டம்பருக்கும் இடையிலான காலத்தில் நீங்கள் இலங்கை செய்தித்தாள்களைப் பார்த்தால், இதேபோன்ற செய்திகள் ஒவ்வொரு நாளும் வெளியாகி இருப்பதை அவதானிக்கலாம். அந்தச் செய்திக்கும் ரணிலின் இன்றைய புதிய கூட்டணி பற்றிய செய்திகளுக்கும் வரலாற்று ஒற்றுமை உள்ளது.

ரணிலின் சீடர்களின் இருக்கைகள் ஏற்கனவே சூடாகி வருகின்றன என்பதைத்தான் இது காட்டுகின்றதா?

அவை இப்போது சூடாகவில்லை, ஏற்கனவே சூடாகத்தான் இருக்கின்றன. இந்த நாட்களில் பொதுஜன பெரமுனவின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில் வரவேண்டும் என்று கூறும் அந்தக் கட்சியின் உறுப்பினர்களும் ரணிலும் சஜித்தும் மீண்டும் இணையவேண்டும் என்று கூறும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் மிகக் கனமாகக் ’கவனிக்கப்படுகிறார்கள்’. இரு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் அதிகமாகக் கவனிக்கப்படுகிறார்கள் பணத்தால்.

இப்போது ரணில் ஓடத் தொடங்கியிருக்கும் ஓட்டம் மைத்திரியின் இடத்தைப் பிடிப்பதற்கானது. மைத்திரிக்கு மக்கள் ஆணை இருந்தது. மக்கள் ஆணைகூட இல்லாத ரணிலால் இந்த ஓட்டத்தில் எந்த இடத்தைப் பிடிக்க முடியும் என்று தெளிவாகச் சொல்ல முடியவில்லை. ரணில், பொது ஜன பெரமுனவின் ஊடாகவோ ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாகவோ ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவில்லை என்றால், அடுத்த தேர்தலில் அவர் மண் கௌவுவதைத் தவிர்க்க முடியாது. மைத்திரியைப் போன்றே அவருக்கும் அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ரணில் பொதுத் தேர்தலுக்குச் சென்றால், இன்று ரணிலுடன் சேர்ந்து நாட்டை ஆளும் ரணிலின் ஆலோசகர்கள் அரசியலில் இருந்து அகற்றப்படுவார்கள். 2020இல் ரணிலுக்காகத் தமது கழுத்தைக் கொடுத்துத் தியாகம் செய்து பதவியை இழந்தார்கள். அந்த முட்டாள்தனத்தை மீண்டும் ஒருமுறை செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்களுக்கு இருக்கும் பிரச்சினையெல்லாம் எப்படி ரணிலைவிட்டுக் கழன்று சென்று தப்பிப்பது என்பது மட்டும்தான்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# தடை உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு கிழக்கு ஆளுநருக்கு அதிகாரமில்லை

## அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறுகிறார்



பொரலுகந்த ரஜமஹா விகாரைக்கு சட்டபூர்வமாக விகாரை ஒன்று அமைக்க அனுமதி வழங்கியுள்ள நிலையில் அம்பிட்டியே சீலவங்ச திஸ்ஸ தேரர் அந்த நிலத்துக்குள் உட்பிரவேசிப்பதற்கு தடை விதிக்கும் வகையில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நகரங்கள், பட்டிணங்கள் சபையின் செயலாளரிடம் தடையுத்தரவு விதிக்குமாறு கோரியுள்ளார். மாகாண ஆளுநருக்கு இந்த அதிகாரம் உள்ளதா என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர் அத்துரலியரத்ன தேரர் புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மாகாண ஆளுநருக்கு அந்த அதிகாரம் இல்லை. ஆகவே, சீலவங்ச தேரர் அந்த விகாரை பகுதிக்குள் உட்பிரவேசிக்கலாம், வசிக்கலாம் அதற்கு தடையேதும் இல்லை என்றார்.

நாடாளுமன்றத்தில் இருபத்தேழு இரண்டின் கீழ் கேள்விகளை முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் திருகோணமலை மாவட்டத்தில் நகரங்கள் மற்றும் பட்டிணங்கள் பிரதேச செயலக பிரிவு பகுதி தொல்பொருள் மரபுரிமைக்கு சொந்தமானது.

ஆறு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் 'ஆராயம' ஒன்றை நிர்மாணிப்பதற்கு 60 பேச்சர்ஸ் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வெல்கம விகாரையின் விகாராதிபதி சீலவங்ச திஸ்ஸ தேரருக்கு இந்த காணி வழங்கப்பட்டுள்ளது. இந்த காணியைத்தூய்மைப்படுத்தி அங்கு வசிப்பதற்கு தேரர் சென்ற போது தமிழர்களில் ஒருசிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்த சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சீலவங்சதிஸ்ஸ தேரர் அந்தக் காணிக்குள் உட்பிரவேசிப்பதற்கும், அங்கு வசிப்பதற்கும் தடையுத்தரவு விதிக்குமாறு நகரம் மற்றும் பட்டிணங்கள் பிரதேச செயலாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு தடையுத்தரவு விதிக்க மாகாண ஆளுநருக்கும் பிரதேச செயலாளருக்கும் அதிகாரம் கிடையாது. சட்ட ரீதியில் வழங்கப்பட்டுள்ள காணிக்குள் உட்பிரவேசிப்பதைத் தடுப்பது சட்டவிரோதமானது. இந்தப் பகுதியில் வாழும் தமிழர்களும், தமிழ் தலைவர்களும் போராட்டத்தில் ஈடுபடவில்லை. உயர்மட்டத்தில் இருந்துகொண்டு செயற்படும் ஒரு நபரின் சூழ்ச்சியின் ஊடாகவே இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. ஆகவே மாகாண ஆளுநருக்குத் தடையுத்தரவுபிறப்பிக்கும் அதிகாரம் உள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வருமாறு பதிலளித்தார்.

**கேள்வி:** பொரலுகந்த ரஜமஹா விகாரைக்கு சட்ட ரீதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் விகாரை பகுதிக்குள் உட்பிரவேசிப்பதற்கு தடையுத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண ஆளுநர் மற்றும் பிரதேச செயலாளருக்கு உள்ளதா?

**பதில்:** பொரலுகந்த விகாரை 13-15- 024 என்ற இலக்கத்தின் கீழ் புத்தசாசன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.ஆகவே விகாரை மற்றும் அந்தப் பகுதிக்கு எவரும் செல்லலாம் தடையேதுமில்லை.

**கேள்வி:** இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளதா?

**பதில்:** பொரலுகந்த ரஜமஹா விகாரை மற்றும் போராட்டம் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் விசேட பேச்சு இடம்பெற்றது. திருகோணமலை மாவட்ட அதிபர், நகரம் மற்றும் பட்டிணங்கள் பிரதேச சபையின் செயலாளர் ஆகிய தரப்பினர் அழைக்கப்பட்டு அவர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

**கேள்வி:** வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் அழிக்கப்படுவதை அரசாங்கம் அறிந்துள்ளதா? அது தொடர்பான தகவல்கள் உள்ளதா?

**பதில்:** ஆம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. நாளாந்தம் தகவல்கள் திணைக்களத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி:** சட்டவிரோதமாக மாகாண ஆளுநர் வழங்கிய அறிவுறுத்தலை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா?

**பதில்:** இல்லை, பொரலுகந்த விகாரை பகுதிக்கு அந்த தேரர் செல்லலாம் அங்கு வசிக்கலாம் தடையேதும் இல்லை. - என்றார். (05)



# இலங்கை விமானப்படைத் தளபதியை சந்தித்தார் மாலைதீவு உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் இலங்கை விமானப்படை தளபதியை சந்தித்தார்.

இலங்கைக்கான மாலைதீவு உயர்ஸ்தானிகர் அலி பைஸ் 23 ஆம் திகதி புதன்கிழமை இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவை விமானப்படை தலைமையகத்தில் சந்தித்தார்.

இதன்போது இருதரப்பினருக்குமான கலந்துரையாடலின் பின்பு இந்த சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுசின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. (05)

# நாடாளுமன்ற பணியாளர் குறித்த அச்சுறுத்தல்: சபையின் கௌரவத்துக்குப் பொருத்தமற்றவை

## பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவிப்பு

சபாமண்டபத்தில் சபையின் அலுவல்களை முன்னெடுத்துச் செல்லும்போதும், சில சந்தர்ப்பங்களில் சபா மண்டபத்துக்கு வெளியேயும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களால் நாடாளுமன்ற பணியாளர்கள், செயலாளர்குழு மற்றும் அதன் பணியாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் அதியுயர் சபையின் கௌரவத்துக்குப் பொருத்தமற்றவை என சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக சபாநாயகரின் அறிவிப்பை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ வியாழக்கிழமை சபைக்கு அறிவித்தார்.

குறிப்பாக சபை அலுவல்களை முன்னெடுத்துச் செல்லும்போது நாடாளுமன்றப் பாரம்பரியங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைய இந்தப் பணிகளை சுயாதீனமாக மற்றும் பக்கச்சார்பற்ற முறையில் நிறைவேற்றுவதற்கு சபாநாயகர், சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினருக்கு ஆலோசனை வழங்கும் அல்லது உதவும் அதிகாரிகள் என்ற ரீதியில் அரசமைப்புக்கு அமைய அரசமைப்பின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்ற செயலாளர் குழுவுக்கு, சுயாதீனமாக அல்லது பக்கச்சார்பற்ற முறையில் செயற்படுவதைத் தடுப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இவ்வாறான நடவடிக்கைகள் அமையலாம்.

அதனால் இதுபோன்று நாடாளுமன்ற செயலாளர் குழுவில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அதனுடன் இணைந்த பணியாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள், அடிப்படை அற்ற குற்றச்சாட்டுக்களை மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்துக்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக சபாநாயகரின் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

(05)

# சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலைக்கு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் ஆதரவு









லிட்டில் ஹார்ட்ஸ் திட்டத்துக்கு ஆதரவு அளிக்கும் வகையில் சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு இலங்கை கிரிக்கெட் வீரர்கள் விஜயம் செய்திருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, வீரர்கள் மருத்துவமனையின் இருதய சிகிச்சைப் பிரிவு மற்றும் இருதயம், நெஞ்சு மற்றும் நுரையீரல் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை பார்வையிட்டனர்.

தேசிய வீரர்கள், பயிற்சியாளர்கள், ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவன அதிகாரிகள் ஆகியோர் இந்த விஜயத்தில் இடம்பெற்றனர்.

அவர்களை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜி.விஜேசூரிய லிட்டில் ஹார்ட்ஸ் திட்டப் பணிப்பாளர் வைத்தியர் துமிந்த சமரசிங்க ஆகியோர் வரவேற்றனர்.

'லிட்டில் ஹார்ட்ஸ் திட்டத்தின்' தற்போதைய பணிகள் தொடர்பாக வீரர்களுக்கு வைத்தியசாலை அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் லிட்ல் ஹார்ட்ஸ் திட்டத்துக்கு 10 கோடி ரூபாவை ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் அண்மையில் அன்பளிப்பு செய்திருந்தது. இந்த நிதி, சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதய மற்றும் அவசர பராமரிப்பு கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்படும். இந்தக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டவுடன் இதய நோயால் பாதிக்கப்படும் மற்றும் கடுமையாக சுகவீனமுற்ற சிறுவர்களுக்கான சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும். (05)

# தபால் துறையை நவீனமயப்படுத்த அரச, தனியார் துறை இணைவாம்

## சாந்த பண்டார கூறுகிறார்

தபால் துறையை நவீனமயப்படுத்துவது தொடர்பில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 10 பில்லியன் ரூபா செலவில் அரச மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ராஜிகா விக்ரமசிங்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜிகா விக்ரமசிங்க எம்.பி. தனது கேள்வியில் -

நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தபால் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் உபதபால் நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை எனக் கேட்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் -

நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை 4,003. உப தபால் நிலையங்கள் 3,351ஆகும். அதிகமான தபால் அலுவலகங்கள் மத்திய மாகாணத்திலேயே காணப்படுகின்றன. தபால் துறையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளில், குறிப்பாக மலையகப் பெருந்தோட்டப்பகுதிகள் மற்றும் கேகாலை மாவட்டத்திற்கும் முன்னுரிமை வழங்கப்பட உள்ளது.அதேவேளை, அண்மைக் காலமாக பல தபால் நிலையங்கள் உடைக்கப்பட்டு கொள்ளையிடப்பட்டு வரும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபருடனும் பேச்சு நடத்தி இருக்கிறோம்.

அத்துடன், தபால் துறையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகள் டிஜிற்றல் மயப்படுத்தலோடு ஆரம்பிக்கப்படும், அரச மற்றும் தனியார் துறை இணைந்த வேலைத்திட்டமாக அது முன்னெடுக்கப்பட இருக்கிறது. அதேநேரம் தபால் நிலையங்களுக்கு பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார். (05)

# ஹோட்டல் அறையில் பெண்ணின் சடலம்

## சந்தேகநபர் தலைமறைவு

பண்டாரவளை பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் அறையில் இருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

எட்டம்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

50 வயதுடைய களனி, கோணவலையைச் சேர்ந்த ஒருவர் குறித்த ஹோட்டலுக்கு வருகைதந்ததுடன் உயிரிழந்த பெண்ணை ஹோட்டலுக்கு அழைத்ததாகவும் பின்னர் அந்த நபர் ஹோட்டலில் இருந்து அவசரமாக வெளியேறியுள்ள நிலையில், சந்தேகமடைந்த ஹோட்டல் ஊழியர்கள் இருவரும் தங்கியிருந்த அறையை சோதனையிட்டபோதே குறித்த பெண் சடலமாக காணப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ள நிலையில், நஞ்சும் அருந்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேக நபரால் எழுதப்பட்ட கடிதமொன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்வதற்கான நட வடிக்கைகளை பண்டார வளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (05)

# பிரிவெனா ஆசிரியர்களின் ஓய்வூதிய பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும்

## விஜித பேருகொட உறுதி

பிரிவெனா ஆசிரியர்களின் ஓய்வூதியப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட தெரிவித்தார்.

அதற்காக ஓய்வூதியச் சட்டம் மற்றும் பிரிவெனாக் கல்விச் சட்டம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்கு அவசியமான ஆலோசனைகள் குறித்து ஓய்வூதியத் திணைக்களம், சட்டமாஅதிபர் திணைக்களம், சட்டவரைவுத் திணைக்களம்ஆகியவற்றின் பரிந்துரைகளின்படி, அமைச்சரவையின் அங்கீகாரம் பெறுவதற்கானபணிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த விஜித பேருகொட-

நமது நாட்டில் கலாசாரத்துக்கும் மதத்துக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு உள்ளதாகவும், அரச காலம் முதல் ஒரு கிராமத்தின் தலைவராக அந்தக் கிராமத்தில் உள்ள விகாரையின் பிரதம தேரரே செயற்பட்டு வருகிறார் எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

பிரிவெனாக்கல்வியைப் பொறுத்தவரையில், விகாரைகளிலேயே பெரும்பாலும் பிக்கு மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். இந்நாட்டு வரலாற்று நெடுகிலும் பிரிவெனாக் கல்வி முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது.

தற்காலத்தில் எமது நாட்டில் பெரும்பாலும் மேலைத்தேய கல்வி முறையே காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், ஆனாலும் இன்று வரை எமது பிரிவினாக் கல்வியைப் பாதுகாத்து, நடைமுறைப்படுத்தி வருவதில் தேரர்களின் பங்களிப்பு அளப்பரியது என்றும் அவர்களின் அர்ப்பணிப்பின் காரணமாக இன்று பிரிவெனாக் கல்விக்கென்று தனியான இராஜாங்க அமைச்சே உள்ளதாகவும் தெரி வித்தார்.

அந்த வகையில், தற்போது எமது நாட்டில் 05 பிரிவெனாக் கல்விப் பிரிவுகள் இருக்கின்றன எனவும், 822 பிரிவினாக் கல்வி நிறுவனங்களும், 77 ஆயிரத்துக்கும் அதிகமான பிரிவெனா மாணவர்கள் இருக்கின்றனர் எனவும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், சுமார் 8,000 ஆசிரியர்கள் இருக்கின்றனர் எனவும் 22 மாவட்டங்களில் பிரிவினாக் கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றனர் எனவும் மேலும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலையிலும் கூட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பரிந்துரைக்கமைய கல்வி அமைச்சு, பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்கியதாகவும் -

அதன் மூலம் பிரிவெனாக் கல்வி மேம்பாட்டுக்காக இயன்றளவு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

பிரிவெனாக் கல்வியைத் தொடரும் பிக்கு மாணவர்களுக்கு ஏனைய பாடசாலைகளைப் போன்று உள்நாட்டு சாதாரண பாடசாலைப் பாட விதானங்களும் கற்பிக்கப்படுவதாகக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், பிக்கு மாணவர்கள் க.பொ.த சாதாரண தர மற்றும் உயர் தரங்களில் தேசிய ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருவதாகவும் தெரி வித்தார்.

ஏனைய அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் போன்று பிரிவெனா ஆசிரியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குதல் தொடர்பாக தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பிரிவெனாக் கல்வியை மேம்படுத்த பல்வேறு பணிகளை முன்னெடுத்துவருவதாகவும் தெரிவித்தார்.

அதன்படி, சர்வதேச ரீதியில் எமது நாட்டு பிரிவெனாக் கல்வியின் முன்னேற்றத்துக்கு உதவிகளை வழங்க பலர் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அவர்களின் ஆதரவுடன் பிரிவெனாக் கல்விமேம்பாட்டுக்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதுடன், எதிர்காலத்தில் பிரிவெனாக் கல்வி நிதியம் ஒன்றை ஸ்தாபிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஒருநாட்டின் அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார ரீதியிலான பொருள் மற்றும் சேவை தொடர்பான அபிவிருத்தி மாத்திரமன்றி, அந்நாட்டு மக்களின் சமூக, கலாசார, ஒழுக்க மேம்பாடு மற்றும் மானிட முன்னேற்றமே உண்மையில் முழுமையான அபிவிருத்தியாகும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (05)

# பண்டார வன்னியனுக்கு முல்லைத்தீவில் அஞ்சலி!

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் 220ஆம் ஆண்டு வெற்றிநாள் நேற்று(வெள்ளிக்கிழமை) பல இடங்களிலும் நினைவுகூரப்பட்டது.

அந்தவகையில் பண்டாரவன்னியன் ஒரே வாள்வீச்சில் அறுபது வெள்ளையர்களை வீழ்த்தியதாகக் கூறப்படும் முல்லைத்தீவு - முள்ளியவளை, கற்பூரப் புல்வெளியில் பண்டார வன்னியனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.



முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், கற்பூரப் புல்வெளியில் மலர்தூவி, சுடரேற்றி உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூக செயற்பாட்டாளர்களான இ.ஜெரோன்சன், கி.சிவகுரு ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# நாட்டை மீட்கப் போராடிய பண்டாரவன்னியனை இங்கை அரசாங்கம் நினைவுகூருதல் வேண்டும்

## ரவிகரன் சுட்டிக்காட்டு

அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடி இந்த நாட்டை மீட்கப்போராடிய தமிழ்மாவீரனே பண்டாரவன்னியனாவான்.

எனவே மாவீரன் பண்டாரவன்னியனின் வெற்றிநாளை இலங்கை அரசாங்கமும் நினைவுகூர வேண்டும் என துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மாவீரன் பண்டார வன்னியனின் 220ஆம் ஆண்டு வெற்றிநாள் நிகழ்வு முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது. இந்நினைவுகூரலில் கலந்துகொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மாவீரன் பண்டார வன்னியன் முல்லைத்தீவில் பீரங்கிகளோடு இருந்த வெள்ளையர்களின் கோட்டைக்குள் புகுந்து, வெள்ளையர்களை வாள் கொண்டு வென்ற வரலாற்று முக்கியம் வாந்த நாள் இதுவாகும்.

இவ்வாறு அந்நிய ஆதிக்கத்திடமிருந்து எம்மை மீட்க போராடிய ஒரு தமிழ் மாவீரனை, சாதனையாளனை தமிழர்களாகிய நாம் நினைவுகூருகின்றோம்.

இலங்கை அரசானது இவ்வாறானதொரு வீரத் தமிழனை மதிப்பளிக்கவேண்டுமென்றோ, அல்லது நினைவுநாள்களை மேற்கொள்ள வேண்டுமென்றோ சிந்தித்தது கிடையாது.

அந்நியர்களை விரட்டியடித்த ஒரு வீரனை நினைவுகூராமல், இலங்கை அரசாங்கம் பிரிவினையைக் காண்பிக்கின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

எது எவ்வாறாயினும் நாம் தொடர்ந்தும் மாவீரன் பண்டாரவன்னியனை நினைவுகூருவோம்-என்றார். (05)

# யாழ். மாவட்டத்தில் வறட்சியால் 22 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

## அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவிப்பு



அனர்த்த நிலைமையைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் நீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் வறட்சி நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலைமையின்படி 22 ஆயிரம் குடும்பங்கள் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அதில், சுமார் 8,000 குடும்பங்களைசேர்ந்த மக்கள் குடிநீர் தட்டுப் பாட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக நெடுந்தீவு, ஊர்காவற்துறை, சாவகச்சேரி, மருதங்கேனி, சங்கானை போன்ற பிரதேச செயல பிரிவுகளில் இந்த குடிநீர் பற்றாக்குறை அல்லது மிக வறட்சியான நிலைமை காணப்படுகின்றது.

இந்த பகுதிகளுக்கு அனர்த்த முகாமைத்துவ சேவை நிலையத்தின் ஊடாக அந்த திணைக்களத்தினுடைய அனுசரணையுடன் குடிநீர் வழங்கு-வதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல தொடர்ச்சியாக மாவட்டத்தில் இருக்கக்கூடிய இந்த நிலைமை நீடிக்குமாக இருந்தால் சில வேலைகளில் இன்னும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதற்கு ஏற்றாற் போல விரைவில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களை அழைத்து அனர்த்த முகாமைத்துவ தொடர்பான ஒரு விசேட கூட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். எனவே, தற்போதுள்ள அனர்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் நீரை சிக்கனமாக பயன்படுத்து-வதற்குப் பொதுமக்கள் முன்வரவேண்டும்.

அதேபோல விவசாயத்துறையில் பாதிக்கப்படுவோர் சம்பந்தமாகவும் அதே போல் வறடச்சியின் மூலமாக அன்றாட தொழில் இழந்துள்ளோர் தொடர்பிலும் விவரங்களைச் சேகரித்து அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அரசு நிறுவனங்கள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக உதவிகளை வழங்கு-வதற்காக விரைவாக விசேட கூட்டத்தைக் கூட்டவுள்ளோம்.

தற்போதுள்ள வறட்சியான சூழ்நிலை காரணமாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட ரீதியாக விண்ணப்பங்கள் எவையும் வரவில்லை.

எனினும், விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. கிணற்று நீர் வற்றிக்கொண்டுபோகின்றது. எனவே ஒட்டுமொத்தமாக பிரதேச செயலகரீதியாக விவசாயிகளினுடைய பாதிப்பு சம்பந்தமான ஒரு கணக்கெடுப்பை செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளோம். - என்றார். (05)

# சம்பள நிலுவையான 25,10,400 ரூபாவை பெற்று குவைத்திலிருந்து நாடு திரும்பிய பணிப்பெண்

அண்மைக்கால வரலாற்றில் பெரும்சம்பள நிலுவையான இலங்கை பெறுமதியில் 25,10,400 ( 2,400 குவைத்தினார்கள்) ரூபாவை பெற்றுக் கொண்ட பெண் ஒருவர் குவைத்திலிருந்து நாடு திரும்பியுள்ளார்.

அந்நாட்டில் பணிப் பெண்ணாக வேலை செய்த ஜெனிட்டா டெலிகா என்ற இலங்கைப் பெண்ணே வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

46 வயதான ஜெனிட்டா டெலிகா என்ற காலி, கோனாபினுவில் வசிக்கும் ஒரு பிள்ளையின் தாயாராவார். இவரே மிகப் பெரிய சம்பளப் பாக்கியை பெற்றுக் கொண்டு நாடு திரும்பினார்.

இவர் கடந்த 2019 ஆம் ஆண்டு பணிப் பெண்ணாக குவைத்தில் உள்ள வீடு ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

அந்த நாட்டில் பாடசாலை ஆசிரியையான பெண் ஒருவரின் வீட்டில் பணிப் பெண்ணாக பணிபுரிந்த இவர் ஆசிரியையான எஜமானியால் பலத்த துன்புறுத்துக்கு உள்ளாகினார்.



'அந்த வீட்டின் உரிமையாளரான பெண் எப்போதும் என்னை அடிப்பார். 'எனக்கு மாத சம்பளம் முறையாக வழங்கப்படவில்லை'. என ஜெனிடா டெலிகா கூறுகிறார்.

இதுபற்றி அம்மாவிடம் தெரிவித்தேன். அதன்படி, 02.02.2022 அன்று அம்மா கொழும்பு வந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்தார் என்றும் அவர் கூறியுள்ளார். குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்துக்கு இது தொடர்பில் முறையிடப்பட்டதையடுத்து இலங்கை தூதரக அதிகாரிகள் அந்நாட்டுப் பொலி-ஸாருக்கு இதனை அறிவித்திருந்தனர்.

அப்போதும் குறித்த வீட்டிலேயே ஜெனிடா டெலிகா பணி புரிந்து வந்ததால் வீட்டின் உரிமையாளரை அந்நாட்டு பொலிஸார் அழைத்து விசாரணையை முன்னெடுத்தனர்.

அந்த வீட்டில் 3 வருடங்களும் 8 மாதங்களும் பணியாற்றிய ஜெனிடாவுக்கு ஒரு வருடமும் 3 மாதத்துக்குமான சம்பளமே வழங்கப்பட்டது.

பின்னர், இலங்கை தூதரக அதிகாரிகள் இந்த முறைப்பாட்டை அப்பகுதி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தபோது, மீதமுள்ள சம்பள பாக்கியை வழங்கு-வதற்கு வீட்டின் உரிமையாளர்களுக்கு ஒரு மாதகால அவகாசம் வழங்கப்பட்டது.

அதுவரை ஜெனிட்டா டெலிகா இலங்கை தூதரகத்துடன் இணைந்த வரவேற்பு மையம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே அவர் தனக்கான பாக்கிப் பணத்தைப் பெற்றுக் கொண்டு இலங்கை வந்துள்ளார். (05)

# ஐக்கிய இராச்சியத்தின் சுகாதாரப் பாதுகாப்பு புலமைப்பரிசில் திட்டம் 2024இல் மீளவருகிறது

ஐக்கிய இராச்சியத்தின் உதவித் திட்டத்தின் 2 ஆம் கட்டத்தை இலங்கையில் ஆரம்பிப்பது தொடர்பாக பிரித்தானிய பதில் உயர் ஸ்தானிகர் லிசா வான்ஸ்டால், பிரித்தானிய சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ப்ளெமிங் நிதியத்தின் பிரதிநிதிகள் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கு இடையில் புதன்கிழமை கொழும்பு அலரிமாளிகையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.



கொவிட் தொற்றுநோய் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருந்த சுகாதாரப் பாதுகாப்பு உதவித் திட்டம் 2024 ஜனவரியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பிரிட்டிஷ் பதில் உயர் ஸ்தானிகர் இங்கு தெரிவித்தார்.

இது நோயாளியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், தேசிய சுகாதாரக் கொள்கை பற்றி அறிவிக்கவும் மற்றும் உருவாகிவரும் அச்சுறுத்தல்கள் குறித்து எச்சரிக்கவும் பொது சுகாதார கண்காணிப்புத் துறைக்கு ஆதரவளிக்கும்.

இந்த உவித் திட்டம் சுகாதார அமைச்சு, உலகசுகாதாரதாபனம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு பயிற்சிப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். நாட்டின் சுகாதார முறைமையின் முன்னேற்றத்துக்கு மிகவும் பயனுள்ள இந்த சுகாதார சேவை திட்டத்தின் பயனாளியாக இலங்கையை தெரிவுசெய்தமைக்காக ஐக்கிய இராச்சியத்திற்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

இலங்கையின் சுகாதார சேவை பிரித்தானிய முறைமையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், இவ்வாறான சுகாதார சேவை திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித சிரமமும் ஏற்படுவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டிஷ் கவுஸ்ஸிலின் வதிவிட பணிப்பாளர் ஓர்லாண்டோ எட்வர்ட்ஸ், கவுன்சிலின் ஆங்கில மொழி பயிற்சி முறைகள் குறித்த வெளியீட்டுத் தொகுதிகளை பிரதமரிடம் வழங்கினார்.

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகம் செய்யுமாறு பதில் உயர் ஸ்தானிகராலயத்தையும், பிரிட்டிஷ் கவுன்ஸிலையும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் ஐக்கிய இராச்சியத்தின் பிலமிங் நிதியத்தின் கலாநிதி ஜெசிகா வொலிஸ் மற்றும் வைத்தியர் நேஹா குலாட், பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதம அதிகாரி அன்ட்ரூ பிரைஸ் மற்றும் பிரதமரின் மேலதிக செயலாளர் தீபா லியனகே ஆகியோர் கலந்துகொண்டனர். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.08.2023இல் வெளியிடப்பெற்றது.